மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29ஆம் நாள் செவ்வாய்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.தீபா உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 468/2018 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சண்முகம் | வயது | .. 64 |
| த/பெ. | .. ரங்கசாமி | சாதி | .. |
| கிராமம் | .. சேத்பட்டு | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

**வா.சா.1 ( குறுக்கு விசாரணை )**

1. என் தந்தை ரங்கசாமி எப்போது காலமானர் என்றால் 10 வருடங்களுக்கு மேல் ஆகும். என் தந்தை ரங்கசாமி எந்த மொழியில் கையெழுத்து போடுவார் என்றால் தமிழில் போடுவார். என் தந்தை ரங்கசாமி உடல்நிலை சரியில்லாமல் படுத்த படிக்கையாக 1 மாதம் 40 நாட்கள் காலம் இருந்து பின் இறந்தார். என் தந்தைக்கு எத்தனை 5 மகன்கள் 2 பெண்கள் பிள்ளைகள். அவர்கள் சுப்பிரமணியம், பழனி, ஆதிலட்சுமி, சண்முகம் ( வாதி ), சரஸ்வதி, கோதண்டராமன், லட்சுமணன் ஆகியோர் ஆவர். 1ம் பிரதிவாதியின் தந்தையின் பெயர் பழனி, பழனி என்னுடைய அண்ணன் ஆவார்.

2. பிரதிவாதிகள் என்மீதும் என்னுடைய உடன்பிறந்தவர்கள் மீதும் மற்றும் அவர்களின் வாரிசுகள் மீதும் பாகப்பிரிவினை வழக்கு **ஒ.எஸ். 287/2008** இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்கூறிய வழக்கு இறுதிநிலை தீர்ப்பாணைக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்கூறிய பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யும் போது என் தந்தை காலமாகிவிட்டார்.

3. மேற்கூறிய வழக்கு நான் ஆதிலட்சுமி, சரஸ்வதி, லட்சுமணன் ஆகியோர் ஆஜராகி வழக்கறிஞர் மூலம் வழக்கை நடத்தினர். **08.09.2008** அன்று வழக்கறிஞர் மூலம் வக்காலத்து

தாக்கல் செய்தனர். மேற்கூறிய வழக்கில் **13.10.2008** அன்று எதிருரை தாக்கல் செய்யாததால் மேற்கூறிய நால்வரும் ஒருதலைபட்சமாக ஆக்கப்பட்டனர். மேலும் கிருஷ்ணவேணி ( கோதண்டராமன் மனைவி ) , பிரவினா ( கிருஷ்ணவேணி மகள் ), பிரதிபா( கிருஷ்ணவேணி மகள் ) ஆகியோர் எதிருரை தாக்கல் செய்து வழக்கை நடத்தினார்கள் என்றால் சரிதான்.

4. மேற்கூறிய வழக்கு **24.07.2009** அன்று மேற்கூறிய இருவரும் கலந்துகொண்டு இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது என்றால் எனக்கு தெரியாது. மேற்கூறிய தீர்ப்பை பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் கமிஷ்ணர் வந்து தாவா சொத்தை பார்வையிடம் போது எனக்கு தெரியவந்தது ( 2012 கமிஷ்ணர் சொத்தை இறுதிநிலை தீர்ப்பாணைக்காக பார்வையிட சென்றார் ).

5. 2012 ல் வந்து கமிஷ்ணர் வந்து பார்த்தபிறகு தான் இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்கிறோம். மேலும் **ஓ.எஸ்.287/2008 இ**றுதிநிலை தீர்ப்பாணை **ஐ.எ. 628/2009** ன் படி எனக்கு சார்வு செய்யப்பட்டது என்றால் எனக்கு சார்வு செய்யப்படவில்லை. நான் எனது முதன்மை விசாரணையில் மேற்கூறிய **ஓ.எஸ்.287/2008** தீர்ப்பாணை போர்ஜரி என்று நான் கூறினேன் என்றால் நான் அப்படி கூறவில்லை.

6. **04.12.2009** அன்று எனக்கு இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் நீதிமன்ற அறிவிப்பு எனக்கு சார்வு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எந்த பரிகாரம் கேட்டு எதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் என்ன சர்வே எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களோ, அதில் பாகம் கொடுத்தால் இந்த சர்வே எண்ணில்களில் பாகம் கொடுக்கிறேன் அப்படி என்று தான் நான் வழக்கு தாக்கல் செய்கிறேன்.

7. யார் மீது நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கோட்டீஸ்வரி மற்றும் விஜயா எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கமிஷ்ணர் 2012 வழக்கு சொத்தை பார்த்த பிறகு தான் நான் உடனே வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். மேற்கூறிய **ஓ.எஸ்.287/2008** முதல்நிலை தீர்ப்பாணை எதிர்த்து நான் மேல்முறையிடு செய்தேனா என்றால் இல்லை. என்னை தவிர மற்ற பிரதிவாதிகள் இந்த வழக்கை மேல்முறையீடு செய்தார்களா என்றால் தெரியாது.

8. இன்று வரை நான் இந்த வழக்கு மேல்முறையீட செய்தேனா என்றால் இல்லை. மேலும் ஒ.எஸ்.287/2008 முதல் நிலை தீர்ப்பாணை ரத்து செய்யும்படி நான் ஏதும் மனு தாக்கல்

செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை எனுக்கு தான செட்டில்மெண்ட் ஏற்படுத்தினார் என்றால் 2001ல் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. மேற்கூறிய செட்டில்மெண்ட் ஆவணம் **09.10.2001** ல் என் தந்தை எழுதிகொடுத்தாரா என்றால் சரிதான். **10.10.2001ல்** என் தந்தை காலமாகிவிட்டார் என்று சொன்னால் இல்லை.

9. என் தந்தைக்கு ஏழு பிள்ளைகள் இருக்கும் நிலையில் எதற்காக எனக்கும், 2ம் வாதிக்கும் தான செட்டில்மெண்ட் எழுதிகொடுத்தார் என்றால் என் தந்தை சொசைட்டில் வாங்கிய கடன் வாங்கியாதால் கடனுக்காக தான செட்டில் மெண்ட் எழுதிகொடுத்தார். கடனை நாங்கள் கட்டியபிறகு தான் இரண்டு வாதிகளுக்கும் எழுதி கொடுத்தார். கடன் எவ்வளவு என்றால் **ரூ. 1, 23,713.50 பைசா** ஆகும்.

10. **வா.சா.2** தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சாட்சிகள் என் உறவினர்கள் கிடையாது மூன்றாம் நபர்கள் தான். **வா.சா.2ல் நா**ன் கையொப்பம் இட்டேனா என்றால் நான் மட்டும் போட்டேன். இரண்டாம் வாதி போடவில்லை. எதற்காக இரண்டாம் வாதி கையொப்பம் இடவில்லை ஏ்ன்றால் அவர் அச்சமயம் வெளியூரில் இருந்ததால் கையொப்பம் போடவில்லை. வா.சா.2ல் என் தந்தை கையொப்பம் இட்டாரா ஏ்ன்றால் போட்டார். **வா.சா2ல** ஏ்ன தந்தை கையொப்பம் இடவில்லை நான் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

11. மேற்கூறிய வா.சா2ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் சேர்த்து **ஓ.எஸ். 287/2008** வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் வேற ஏதாவது கிரையம் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை, வழக்கு வியாபாரம் செய்துதான் என் தந்தை கிரையம் பெற்றார். மேற்கூறிய **ஓ.எஸ். 287/ 2008ல்** இறுதிநிலை தீர்ப்பாணை பிறக்கப்படவில்லை தற்போது வரை சொத்துக்களை பிரித்துகொடுக்கவில்லை ஏ்ன்று சொன்னால் சரிதான்.

12. பிரதிவாதிகள் இந்த வழக்கு சொத்துக்களை ஆக்கிரமிப்பு பண்ணவில்லை அத்துமீரி வரவில்லை என்று சொன்னால் சரிதான். **20.01.2010** ல் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று நான் கூறியிருந்தால் நான் கூறியது தவறு. முதல் நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையில் இந்நீதிமன்ற அறிவிப்பு எனக்கு சார்வு செய்யப்பட்ட பிறகுதான் தீர்ப்பானது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்தது தவறு

என்றும் நான் மேற்கூறிய **ஒ.எஸ். 287/2008ல்** நான் மேல்முறையீடு செய்துஇருக்கு வேண்டும் என்றால் சரியல்ல.

13. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் கேட்டுள்ள 3ம் பரிகாரத்திற்கு நான் முறையாக நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் **ஒ.எஸ். 287/2008** பிரதிவாதிகளாக உள்ளவர்களை நான் வாதிகளாக இந்த வழக்கில் இணைத்து தாக்கல் செய்து இருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேற்கூறிய வாறு வேண்டிய தரப்பினரை நான் வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**

Taken down by me in open Court read
over to the witness and acknowledged
by him/her to be correct.

Sdl/-B.Salma
District Munsif.
Polur.